செ.வெ.எண்: 654 நாள்: 10.10.2020

**<u>தஞ்சாவூர் மாநகராட்சியில் சீர்மிகு திட்டப்பணிகள் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் நேரில் ஆய்வு.</u>**

தஞ்சாவூர் மாநகராட்சிக்கு உட்பட்ட வண்டிக்காரன் சாலை பகுதியில் சீர்மிகு திட்டத்தின் கீழ் நடைபெற உள்ள பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் இன்று (10.10.2020) நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இவ்வாய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தாவது

தஞ்சாவூர் மாவட்டத்தில் சீர்மிகு திட்டத்தின் கீழ் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன இதன் ஒரு பகுதியாக தஞ்சாவூர் வண்டிக்காரன் சாலை முதல் கொடிமரத்து மூலை வரை உள்ள சுமார் 700 மீட்டர் நீளமுள்ள அகழியை சுத்தப்படுத்தி,கரைகளை அகலப்படுத்தி,அழகுபடுத்தும் பணி விரைந்து மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார் இப்பணியின் போது சீர்மிகு திட்டத்தின் மூலம் பொது மக்கள் பயன்படும் வகையில் நடைபாதையுடன் கூடிய குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் கூடிய பூங்காக்களும் ஏற்படுத்திட அறிவுறுத்தினார்

இதற்கு முன்னதாக கல்லணைக் கால்வாய் பெரியகோவில் முதல் ஆத்துப்பாலம் வரை நடைபாதையை முழுவதும் நடந்து சென்று ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நடைபாதையில் உள்ள பாலங்களையும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பொதுப்பணித் துறை அலுவலர்களுடன் இணைந்து இப்பணியை மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப. அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையாளர் திருமதி.ஜானகிரவீந்திரன், செயற்ப்பொறியாளர் திரு.ராஜக்குமாரன், உதவி செயற்ப்பொறியாளர் கார்த்திகேயன், தஞ்சாவூர் வட்டாட்சியர் வெங்கடேஸ்வரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.